20.12.2022
அசல் வழக்கு எண்: 51/2019

வா.சா.1 சாட்சி பால்ராஜ் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

அழகிரிரெட்டியார் என்பவர் எனது தாத்தா ரெங்கசாமிரெட்டியாரின் பங்காளி என்றால் சரிதான். அழகிரிரெட்டியாருக்கு அழகர்சாமிரெட்டியார் மற்றும் சுப்பாரெட்டியார் என்ற 2 மகன்கள் என்றால் சரிதான். அழகர்சாமி ரெட்டியாரின் மகன் சுப்பையா என்ற சுப்பாரெட்டியார் என்ற மகன் தற்போது உயிருடன் இருக்கிறார் என்றால் சரிதான். அழகிரிரெட்டியாரின் 2 வது மகன் சுப்பாரெட்டியாருக்கு ராமசாமிரெட்டியார் மற்றும் சுப்பாரெட்டியார் என்ற 2 மகன்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது தாத்தா ரெங்கசாமிரெட்டியாருடன் பிறந்தவர் அழகர்சாமிரெட்டியார் என்றால் சரிதான். எனது தாத்தா ரெங்கசாமிரெட்டியாருக்கு எனது தகப்பனார் சுப்பாரெட்டியார் மற்றும் மகாலெட்சுமி என்ற 2 பிள்ளைகள் என்றால் சரிதான். மகாலெட்சுமிக்கு என்பவருக்கு திருமணமாகி ஒரு பெண் பிள்ளை இருந்தார் என்றால் சரியல்ல. திருமணமானது ஆனால் குழந்தைகள் இல்லை. ரெங்கசாமிரெட்டியாரின் மகனான சுப்பாரெட்டியாரின் மகன்தான் நான் என்றால் சரிதான். எனக்கு உடன் பிறந்த தம்பி துரைப்பாண்டி என்ற ஒருவர் இருக்கிறார் என்றால் சரிதான். எனது தங்கை பாண்டியம்மாள் என்பவர் தற்போது பசுமலையில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

எனது தாத்தாவிற்கு சுப்பாரெட்டியார் என்ற ஒரு பங்காளி இருந்தார் என்றாலும் அவருக்கு ராமசாமிரெட்டியார் என்ற மகன் இருந்தார் என்றாலும் சரிதான். ராமசாமிரெட்டியாருக்கு முதல் மனைவி மூலமாக

சுப்பாரெட்டியார் மற்றும் நாராயணன் என்ற 2 மகன்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அவருடைய முதல் மனைவி இறந்துவிட்ட பிறகு சத்தியகீர்த்தி என்ற நபரை 2 வது திருமணம் செய்தார் என்றால் சரிதான். அவர் மூலமாக வெள்ளைச்சாமி மற்றும் செல்வராஜ் என்ற 2 மகன்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்த வா.சா.ஆ 1 ஆவணத்தின்படி யார் யார் பாகம் பிரித்துகொண்டார்கள் என்றால் எனது தாத்தா ரெங்கசாமிரெட்டியார் மற்றும் அவரது தம்பி அழகர்சாமிரெட்டியாரின் மகள் சுப்புலெட்சுமி ஆகியோர்கள் பாகம் பிரித்துள்ளார்கள். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் அழகர்சாமிரெட்டியார் இறந்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அழகர்சாமிரெட்டியாரின் இறப்பு சான்றிதழையும், வாரிசு சான்றிதழையும் இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 1 ஆவணத்தில் தாவா சொத்து எத்தனையாவது சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் 8 வது இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 3 ஆவணத்தில் 8 வது இலக்க சொத்தானது 7 வது இலக்க சொத்திற்கும், 9 வது இலக்க சொத்திற்கும் இடையே இடைச்சொருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து கட்டுகாலுக்கு கிழக்கு என்று நான்குமால் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கட்டுகால் என்பது எங்கள் கிராமத்திற்கு மெயின் ரோட்டில் இருந்து வரகூடிய பாதை என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் பிளப்பு அடித்தல், திருத்தல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் 2 வது பக்கத்தில் 8 வது இலக்க சொத்து

சேர்க்கபட்டுள்ள விபரத்தை பிளப்பு என்ற இடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 அசல் ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் இல்லை. இதே சொத்து சம்பந்தமாக உசிலம்பட்டி கோட்டாட்சியர் அலுவலகத்திலும் மதுரை மாவட்ட வருவாய் அலுவலகத்திலும் விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். இந்த விசாரணையின் போது வா.சா.ஆ. 1 அசல் ஆவணத்தில் நகல் எடுத்து தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை நிலை தெரியவந்துவிடும் என்பதால் நகல் எடுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனது தாத்தா பெயரில் பட்டா ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. அதன் பிறகு எனது அப்பா பெயரிலும் பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். எனது பெயருக்கு UDR திட்டத்தின்போது பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். UDR திட்டமானது 1987–88 ஆண்டில் நடைபெற்றது என்றால் சரிதான். எனது அப்பா 1987 ற்கு சுமார் 15 ஆண்டிற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பாகவே இறந்துவிட்டார். என்னுடன் பிறந்த சகோதரரும், சகோதரியும் உள்ள நிலையில் எனது பெயரில் எப்படி பட்டா ஏற்பட்டது என்றால் UDR திட்டத்தின்போது அவர்களாக போட்டுவிட்டார்கள். தாவா சொத்தில் எனக்கோ பூர்வீகதாரர்களுக்கும் எந்த காலத்திலும் உரிமையோ அனுபவமோ இருந்தது இல்லை என்றால் சரியல்ல. UDR திட்டத்தின்படி அதிகாரிகளிடம் உண்மையை மறைத்து எனக்கு இருக்கும் பல சொத்துக்களுடன் சேர்த்து தாவா சொத்தை சேர்த்து பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 மற்றும் 3 ஆகிய ஆவணங்கள் மோசடியாக பெற்ற

ஆவணங்கள் என்றால் சரியல்ல.

எனது தாத்தாவின் பங்காளியான அழகிரிரெட்டியாரின் 2 வது மகனான சுப்பாரெட்டியாரின் அவரது மகன் ராமசாமிரெட்டியாரும் மற்றும் மற்றொரு மகன் மைனர் சுப்பாரெட்டியாரை கட்டுப்படுத்தி பிரதிவாதிகளின் தந்தை வெங்கடசாமிக்கு தாவா சொத்தை வா.சா.ஆ. 4 ஆவணத்தின்படி கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ஆவணத்தில் 10 இலக்க சொத்துக்களை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் 9 இலக்க சொத்துக்களை விற்பனை செய்துள்ளார்கள். அதில் தாவா சொத்து 4 வது இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ஆவணத்தில் சர்வே எண். 104/5 ல் நான்குமாலில் கட்டுக்கரைக்கு கிழக்கு என்றும் ராமசாமி நிலத்திற்கும் தெற்கு என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ஆவணத்தில் ரா. சுப்பாரெட்டியார் புஞ்சை நிலத்திற்கு வடக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரெ.சுப்பாரெட்டியார் புஞ்சை நிலத்திற்கு வடக்கு என்றுதான் சொல்லப்பட்டுள்ளது. நாகம்மாள் புஞ்சைக்கு மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரெ.சுப்பாரெட்டியார் என்று புரிந்துகொண்டு தாவா சொத்திற்கு உரிமைகொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல.

தற்போது தாவா சொத்திற்கு வடக்கே ராமசாமிரெட்டியாரின் 2 வது மனைவி சத்தியகீர்த்தி மற்றம் அவரது மகன்கள் அனுபவம் செய்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சத்தியகீர்த்தி மற்றும் அவரது மகன்கள் அனுபவம் செய்யும் இடமானது சர்வே எண். 104/4 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு தென்புறம் சர்வே எண். 104/6 என்றால் சரிதான். அதனை ராமசாமிரெட்டியாரின் முதல் மனைவி

வாரிசுகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். சர்வே எண். 104/2 மற்றும் 104/3 ஆகிய இடங்களை நானும் எனது தாத்தாவின் மூத்த பங்காளி அழகிரிரெட்டியாரின் மகன் அழகர்சாமியும் எங்கள் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிட காலனிக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது கொடுத்துவிட்டோம் என்றால் நான் கொடுக்கவில்லை. எனது அப்பா கொடுத்திருப்பார். அதற்கு பணம் பெற்றுக்கொண்டோம் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது.

UDR ல் ஏற்பட்ட தவறை வைத்து வா.சா.ஆ. 5 ஆவணத்தில் தாவா சொத்து சேர்த்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 6 முதல் 10 வரையிலான கிஸ்திரசீதுகளை பட்டாவை வைத்து மோசடியாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சர்வே எண். 104/1, 104/2, 104/3, 104/4 மற்றும் 104/5 ஆகிய சொத்துக்களுக்கான UDR க்கு முந்தைய செட்டில்மெண்டு ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததுகிடையாது. மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் விசாரித்தபோது செட்டில்மெண்டு ஆவணத்தை பிரதிவாதிகள் தாக்கல் செய்தார்கள் என்றாலும் அதனை நான் பார்த்தேன் என்றாலும் சரியல்ல. மாவட்ட வருவாய் அலுவலர் பிரதிவாதிகள் தாக்கல் செய்த செட்டில்மெண்டு ஆவணம் சரியானதுதான என்பதை பார்க்க அவர்களுடைய அலுவலகத்தில் இருந்த ஆவணங்களை வரவழைத்து பார்த்தார் என்றால் சரியல்ல. அதில் சர்வே எண். 104/1 சர்க்கார் புறம்போக்கு ரஸ்தா என்று காட்டி 22 செண்டு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண். 104/2 ல் கண்ட 11 செண்டு எனது தகப்பனார் பெயரில் தாக்கலாகியுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 104/3 ரயத்துவாரி என்று காட்டி 32

செண்டு ரா. அழகர்சாமிரெட்டியார் பெயரில் தாக்கலாகி உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 104/4 ரயத்துவாரி என்று காட்டி 7 செண்டு சு.ராமசாமிரெட்டியார் பெயரில் தாக்கலாகியுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 104/5 ரயத்துவாரி என்று காட்டி 14 செண்டு அ.சுப்பாரெட்டியார் என்ற பெயரில் தாக்கலாகியுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 104/6 ரயத்துவாரி என்று காட்டி 5 செண்டு சு.ராமசாமிரெட்டியார் பெயரில் தாக்கலாகியுள்ளது என்றால் சரிதான்.

பிரதிவாதிகளின் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தில் 4 இலக்க சொத்திற்கு உசிலம்பட்டி கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆட்சேபனை தெரிவித்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு மட்டுமே ஆட்சேபனை தெரிவித்தேன். என்னுடன் சேர்ந்த மனுதாரர்கள் 4 இலக்க சொத்திற்கு ஆட்சேபனை தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 20 ஆவணத்தில் உசிலம்பட்டி கோட்டாட்சியரிடம் 4 சொத்துக்களுக்கு ஆட்சேபனை தெரிவித்தோம் என்றும் மதுரை மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாவா சொத்திற்கு மட்டும் மேல்முறையீடு தாக்கல் செய்தோம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

தாவா சொத்தின் மொத்த பரப்பளவு 14 செண்டு என்றால் சரிதான். உசிலம்பட்டி கோட்டாட்சியரிடம் நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டா வழங்க சொல்லி உத்தரவானது. கூட்டுப்பட்டாவில் எனக்கு எவ்வளவு விஸ்திரணத்தில் எனக்கு உரிமையுள்ளது என்றால் மொத்த சொத்தும் என்னுடையதுதான். மாவட்ட வருவாய் அலுவலரிடம் நான் தாக்கல் செய்த மேல் முறையீடு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டாவில் இருந்து பிரதிவாதிகள் பெயரை நீக்கவேண்டும் என்று மதுரை மாவட்ட வருவாய்

அலுவலர் உத்தரவு பிறப்பித்துள்ளாரா என்றால் இல்லை.

மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவிற்கு பிறகு திருமங்கலம் தாசில்தார் அலுவலகத்தில் எனக்கும் பிரதிவாதிகளுக்கு விசாரணை நடைபெற்றது என்றால் சரியல்ல. தாசில்தார் விசாரணை நடத்தி எனது பெயர் தவறுதலாக கூட்டுப்பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது என்று முடிவு செய்து கூட்டுப்பட்டாவில் இருந்து எனது பெயரை நீக்கம் செய்துவிட்டார்கள் என்றால் விசாரணை நடத்தப்படவில்லை.

எனது பெயரை கூட்டுப்பட்டாவில் இருந்து நீக்கம் செய்தது செல்லாது என்று மதுரை மாவட்ட ஆட்சியரிடம் வா.சா.ஆ 11 மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் பிரதிவாதிகள் பெயரை நீக்கம் செய்யவேண்டும் என்று கோரிக்கை எதுவும் வைக்கவில்லை என்றால் சரிதான். நானும் எனது சகோதரர் துரைப்பாண்டி என்பவரும் 14.06.1989 ம் தேதி தாவா சொத்தையும் மற்றும் பல சொத்துக்களையும் பாகபிரிவினை செய்து திருமங்கலம் சார்பதிவகத்தில் பதிவு செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை எனக்கு எ செடியுள் சொத்தும் எனது தம்பிக்கு பி செடியுள் சொத்தும் பிடித்துக்கொண்டோம் என்றால் சரிதான். எ செடியுள் சொத்தில் 21 இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ள தாவா சொத்தில் செண்டு 14 ல் வடபுறம் 7 செண்டுக்கு மாலில் மனோகரன் புஞ்சைக்கும் தெற்கு என்று சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அவ்வாறு வடக்குபுறம் மனோகரன் புஞ்சை உள்ளது என்பதை காட்டுவதற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அதற்கு என்னிடம் ஆதாரங்கள் உள்ளதா என்றால் இல்லை.

அதே பாகபிரிவினை பக்கத்தில் பி செடியுள் சொத்தில் தாவா சொத்தை 7 வது இலக்க சொத்தாக காட்டி அதில் தெற்குபுறம் உள்ள 7 சென்டு எனது சகோதரருக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சான்றிட்ட நகல்தான் நானும் எனது சகோதரரும் ஏற்படுத்திகொண்ட பாகபிரிவினை பத்திரம் என்றால் சரிதான். (**14.06.1989 ம் தேதியிட்ட ஆவண எண். 1291/1989 என்ற எண் கொண்ட பாகபிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

எனது தம்பிக்கு ஒதுக்கப்பட்ட தென்புறம் உள்ள 7 சென்டை நான் கிரையம் வாங்கியுள்ளேனா என்றால் எழுத்து மூலமாக கிரையம் செய்யவில்லை. ஆனால் வாக்கரலாக கிரையம் பெற்றுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எனது தம்பியிடம் வாக்கரலாக கிரையம் பெற்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் ஒரு சென்டு ரூ.5,000/– மதிப்பு இருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். நானும் எனது சகோதரரும் பாகபிரித்துகொண்டபோது எனது சகோதரி பாண்டியம்மாளிடம் விடுதலை பத்திரம் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். பூர்வீக சொத்தில் எனது தங்கைக்கும் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தை வேண்டும் என்றே இந்த வழக்கிற்காக தயார்செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. எனது சகோதரரையும், சகோதரியையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ 12 ஆவணத்தில் 9 வது காலத்தில் தரிசு என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 13, 16 முதல் 18

ஆவணங்களில் எந்தவிபரமும் போடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து கடந்த 20 வருடங்களாக தரிசாக இருந்து சீமைகருவேல மரங்கள் மட்டுமே விளைந்துள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 14 மற்றும் 15 ஆவணங்களில் மட்டும் 9 வது காலத்தில் மருத்தி மற்றும் பாசி என்று மோசடியாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ. 19 ஆவணம் மூலமாக எனது பாட்டி சுப்பம்மாள் 14.07.1950 ம் தேதி தாவா சொத்தை ஒட்டி 4 செண்டு கிரையம் வாங்கியதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ. 19 ஆவணத்தில் எத்தனையாவது இலக்க சொத்து அந்த சொத்து என்றால் 2 வது இலக்க சொத்து ஆகும். எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் மொத்தம் 18 செண்டில் பாத்தியம் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதில் 4 செண்டை நடைப்பாதைக்காக எடுத்துவிட்டார்கள். நடைபாதைதான் கட்டுக்கால் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் கட்டுக்காலுக்கும் கிழக்கே உள்ள இடத்தை கிரையம் வாங்கியதாகத்தான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும் அதனால் கிரையம் பெறுவதற்கு முன்பாகவே பாதை இருந்தது என்றாலும் அதனால் பாதைக்காக 4 செண்டு எடுத்ததாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 19 ஆவணம் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத மோசடி ஆவணம் என்றால் சரியல்ல. 4 செண்டிற்கு சுப்பம்மாள் பெயரில் வருவாய் ஆவணங்கள் தாக்கலாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த வருடம் பாதைக்காக அரசாங்கம் ஆர்ஜிதம் செய்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பௌதிக அமைப்பை நான் தாக்கல் செய்த எந்தவொரு ஆவணமும் தெரியப்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ 4 ஆவணத்தை எழுதியது நடுக்கோட்டை கிராம கர்ணம் என்றால் சரிதான். அதில் தலையாரி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதில் மற்றொரு சாட்சி கையொப்பம் செய்தது எனது பங்காளி சுப்பாரெட்டியாரின் மகன் ராமசாமிரெட்டியார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு தென்புறமும், வடபுறமும் மேற்படி ராமசாமிரெட்டியாரின் வாரிசுகள் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ஆவணத்தில் கண்ட சொத்துக்களை விற்பணை செய்வதற்கு அவர்களுக்கு முழு உரிமையுள்ளது என்றாலும் அதன் அடிப்படையில் பிரதிவாதிகளின் சந்தை பதிவு கிரையம் பெற்று 1963 ம் ஆண்டிலிருந்து தற்போது வரை வெங்கடசாமியும் அவரது வாரிசுகளான பிரதிவாதிகளும் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல.

கடந்த 02.03.2019 ம் தேதி பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும் அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தாவா சொத்திற்குரிய செட்டில்மெண்டு பதிவேடு என்றால் சரிதான். (**தாவா சொத்திற்கான செட்டில்மெண்டு பதிவேட்டின் உண்மை நகல் (2 தாள்கள்) பி.வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

தாவா சொத்தில் எனக்கும் எனது பூர்வீகதாரருக்கும் எந்தவொரு உரிமையும், அனுபவமும் இல்லாததால் தாவா சொத்திற்கு விளம்புகை மற்றும் நிரந்தர தடையுறுத்து கட்டளையும் கேட்பதற்கு எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிராது செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.